**<u>சுருக்கம்</u>**

வருவாய்த் துறை – வருவாய்த் துறையினால் நிறைவேற்றப்படும் திட்டங்கள் மற்றும் பணிகளில் சில பணிகளை ஊரக உள்ளாட்சி அமைப்புகள் மேற்கொள்ள, அதிகாரப் பொறுப்புரிமை ஒப்படைத்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

<u>வருவாய் (வ.நி.3 (2) துறை</u>

**<u>அரசு ஆணை (நிலை) எண். 231</u>** **<u>நாள் 29.04.2008.</u>**

**படிக்கப்பட்டது:-**

1. ஊரக வளர்ச்சித் துறையின் செயலாளரின் நேர்முகக் கடித எண். 30462/C1/06–14, நாள் 13.11.2007.
2. அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கு முகவரியிடப்பட்ட சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையரின் கடிதம் எண். A1/32495/2007, நாள் 25.10.2007.
3. சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையரின் கடிதம் எண். RA5(3)/23922/08, நாள் 10.4.2008.

* * * * *

**<u>ஆணை</u>:–**

வருவாய்த் துறையினால் நிறைவேற்றப்படும் திட்டங்கள் மற்றும் பணிகளில் சில பணிகளை ஊரக உள்ளாட்சி அமைப்புகள் மேற்கொள்ள அதிகாரம் வழங்குவது பற்றி 12.10.2007 அன்று நடைபெற்ற உயர்மட்டக்குழு கூட்டத்தில் முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

2) 12.10.2007 அன்று நடைபெற்ற உயர்மட்டக்குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள், அவற்றின் மீது சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் மற்றும் சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் ஆகியோர் தெரிவித்த கருத்துருக்கள் அரசளவில் ஆழ்ந்து பரிசீலிக்கப்பட்டது. அதனடிப்படையில் கீழ்க்கண்ட ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன:-

i) வருவாய்த் துறையினால் பராமரிக்கப்படும் பிறப்பு மற்றும் இறப்பு பதிவுகள் கிராம நிருவாக அலுவலர்களால் தொடர்ந்து பராமரிக்கப்படும். அவற்றின் நகல், நாளது வரையிலான விபரங்களுடன், ஒவ்வொரு மாதமும் உள்ளாட்சி அலுவலகத்திற்கு அளிக்கப்படும். கிராம நிருவாக அலுவலர் மற்றும் உள்ளாட்சித் தலைவர்களும் பிறப்பு மற்றும் இறப்பு சான்று வழங்க அதிகாரமளிக்கப்படும். கிராம ஊராட்சித் தலைவரும், கிராம நிருவாக அலுவலரும் வழங்கும் ஒவ்வொரு சான்று குறித்தும் ஒருவருக்கொருவர் ஒவ்வொரு மாதமும் தகவல் தெரிவித்துக் கொள்ள வேண்டும்.

ii) இருப்பிட சான்று, குடியுரிமைச் சான்று (Domicile Certificate) வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ளோர் சான்று ஆகியன, தொடர்புடைய கிராம

உள்ளாட்சித் தலைவர்களாலும் வழங்கப்படும். ஊரக வளர்ச்சித் துறையினால் தயாரிக்கப்படும் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ளோர் பட்டியல் இதர துறைகளினால் செயலாக்கப்படும் பல்வேறு திட்டங்களுக்காக நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளுக்கு ஏதுவாக இருக்கும் வகையில் அமைய வருவாய்த்துறை மற்றும் ஊரக வளர்ச்சித் துறையினால் நடவடிக்கை எடுக்கப்படும். திருமணச் சான்று தற்போது பதிவுத்துறையால் வழங்கப்படும் முறையே தொடர்ந்து நீடிக்கும்.

iii) முதியோர் ஓய்வூதியம், விதவைப் பெண்கள் ஓய்வூதியம், உடல் ஊனமுற்றோர் ஓய்வூதியம், கணவனால் கைவிடப்பட்டோர் ஓய்வூதியம், வறிய விவசாயத் தொழிலாளர் ஓய்வூதியம் போன்ற பிற ஓய்வூதிய திட்டங்களின் பயனாளிகளின் பட்டியல், கிராம சபைகளின் முன் வைக்கப்பட வேண்டும். இப்பட்டியல் தொடர்பாக கிராம சபைகள் ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பின், வருவாய்த் துறையினால் ஆட்சேபனைகள் மீது விசாரணை மேற்கொள்ளப்பட்டு, இறுதி முடிவு எடுக்கப்பட்டு கிராம சபைக்கு தெரிவிக்க வேண்டும்.

iv) வீட்டுமனைப் பட்டாக்கள், இரண்டு ஏக்கர் தரிசு நிலம் வழங்குதல், வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்குதல், எரிவாயு அடுப்பு வழங்குதல் ஆகிய திட்டங்களின் பயனாளிகளின் பட்டியல் வருவாய்த் துறையினால் மாதமொருமுறை கிராம ஊராட்சியின் முன்பும், காலாண்டுக்கு ஒருமுறை கிராம சபை முன்பும் வைக்கப்பட வேண்டும். இப்பட்டியல் தொடர்பாக கிராமசபை ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பின், வருவாய்த் துறையினால் விசாரணை மேற்கொள்ளப்பட்டு இறுதி முடிவு எடுக்கப்பட்டு கிராம சபைக்கு தெரிவிக்க வேண்டும்.

v) கிராம ஊராட்சிகளுக்கு ஒப்படைக்கப்பட்ட புறம்போக்கு நிலங்களின் பட்டியல் அவற்றின் புல வரைபடத்துடன் (FMB Sketch) ஒவ்வொரு மாவட்டத்திலும் சம்பந்தப்பட்ட ஊராட்சி அலுவலர்களுக்கு வருவாய்த்துறை அலுவலர்களால் அளிக்கப்பட வேண்டும்.

vi) வருவாய்த் துறைத் திட்டங்களுக்கான கிராம அளவிலான குழுக்களை வருவாய்த்துறை அமைக்கும்போது, அக்குழுக்களில் கிராம ஊராட்சிகளின் பிரதிநிதிகளையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

3) இவ்வாணை தமிழகத்திலுள்ள அனைத்து ஊராட்சிகளுக்கு மட்டும் பொருந்தும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

அம்புஜ் சர்மா,
அரசு செயலாளர்.

பெறுநர்

செயலர், ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் துறை, சென்னை – 9.
சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர், சென்னை – 5.
சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர், சென்னை – 5.
முதன்மை ஆணையர் மற்றும் ஆணையர், நில அளவை மற்றும் நிலவரித் திட்டத் துறை, சென்னை – 5.

ஆணையர், நிலச் சீர்த்திருத்தத் துறை, சென்னை—5.
சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர், நகர்ப்புற நில உச்சவரம்பு மற்றும் நகர்ப்புற நிலவரித் துறை, சென்னை—5.
இயக்குநர், ஊரக வளர்ச்சித் துறை, சென்னை—15.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.

நகல்:

தலைமைச் செயலக அனைத்துத் துறைகள், சென்னை – 9.
முதலமைச்சரின் செயலாளர், தலைமைச் செயலகம், சென்னை – 9.
சிறப்பு நேர்முக உதவியாளர், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர், சென்னை—9.
சிறப்பு நேர்முக உதவியாளர், வருவாய் மற்றும் வீட்டுவசதித் துறை அமைச்சர், சென்னை—9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்